EJCTS
www.ejcts.mayas.info

Emperor Journal of Classical Tamil Studies
ISSN: 2582-2977
www.ejcts.mayas.info
DOI-http://dx.doi.org/10.35338/EJCTS.2019.1205
© மாயாஸ் பதிப்பகம்

Volume- I Issue- 1 January - 2022

# அத்தியாயம் - 34

# அறிவியல் பார்வையில் சங்க இலக்கியமும் சமகால இலக்கியமும்

**திருமதி வி. தேவி**
தமிழ் ஆசிரியர்
செட்டிநாடு வித்யாஷ்ரம் பள்ளி, சென்னை.
மின்னஞ்சல்: devidevisaravanans@gmail.com

## முன்னுரை

உயர்தனிச் செம்மொழி என்று போற்றப்படும் தமிழ் மொழியானது, சங்கம் வைத்து வளர்க்கப்பட்ட மொழியாகும். ஞால முதல் மொழி, திராவிட மொழிகளுக்குத் தாய்மொழி, மிகப்பழமையான செம்மொழி என்ற சிறப்புக்குரியது.தொன்மை, முன்மை, எளிமை, இளமை, வளமை, தாய்மை, செம்மை, மும்மை , தனிமை, இனிமை , பெருமை, திருமை, இயன்மை, வியன்மை ஆகிய செவ்வியல் தன்மைகளைக் கொண்டதால் தமிழ் மொழி செம்மொழி எனும் உயர்ந்த உயர்ந்த இடத்தைப் பெற்றுள்ளது. இயல், இசை, நாடக எனும் முப்பெரும் பிரிவுகளை உள்ளடக்கி முத்தமிழ் என்னும் பெயரையும் பெற்றது. அகம், புறம் என வாழ்வியலுக்கு இலக்கணம் வகுத்த மொழியாகும். சங்க இலக்கியங்கள் 26 ஆயிரத்து 350 அடிகள் கொண்டதாக உருவாக்கப்பட்டுள்ளது. உலகிலேயே வேறு எந்த மொழிகளிலும் இந்த அளவு அடிகள் கொண்ட இலக்கியங்கள் உருவாக்கப்படவில்லை என டாக்டர் கபில் சுவலபில் கூறுகின்றார். 473 புலவர்களால் 2381 பாடல்கள் சங்க காலத்தில் இயற்றப்பட்டுள்ளன. சங்க இலக்கியங்கள் பைந்தமிழனின் அன்றாட வாழ்க்கை முறைகளை பிரதிபலிப்பதாக அமைந்துள்ளது. தொன்மையான, உயிரோட்டமுள்ள, அறிவியல் சிந்தனைகள் கொண்ட ஆக்கப்பூர்வமான கருத்தியல்கள் சங்க இலக்கியத்தில் மிளிர்வதை காணமுடிகின்றது. அறிவியல்

பார்வையில் சங்க நூல்களையும் சமகால நூல்களையும் ஆராய்வதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

## பழந்தமிழரின் அறிவியல் பார்வை

இலக்கியத்தைப் படித்து வாழ்க்கையை காணும் போது இலக்கியம் என்பது வாழ்க்கையின் கண்ணாடி ஆகும். இதனை அறிவியல் கண்கொண்டு நோக்கும்போது இலக்கியம் வாழ்க்கையை ஊடுருவி காட்டும் மிகச்சிறந்த ஊடகமாகவே அமைகிறது. வாழ்க்கையையும் மனித எண்ணங்களையும் படைப்பாசிரியர் எந்தக் கோணத்தில் கூறியிருக்கிறார் என்பதே அறிவியல் நோக்கின் பார்வையாகும். கிட்சன் என்பவர் இலக்கிய ஆராய்ச்சி ஒரு சுவையூட்டும் கலை என்று புகழ்கின்றார். மனித வாழ்க்கை முறை இயற்கை சார்ந்தே உள்ளது. இயற்கை என்பது அறிவியல் சார்ந்தது ஆகும். நிலமும், நீரும், காற்றும்,நெருப்பும், வெளியும் என்கிற ஐவகை சேர்க்கையே உலகியல் ஆகும். இயற்கையை அறிந்து அளந்து அறிய புரிந்து வருவதை அறிவியல் என்கிறோம். அறிவியல் சார்ந்த அறிவு பழந்தமிழரிடையே மிகுந்து இருந்ததை தமிழ் இலக்கியம் மூலம் நாம் அறிந்து கொள்ளலாம்.

அறிவியல் கருவிகள் இல்லாத பண்டைய காலத்தில் தமிழர்கள் வானத்தில் உள்ள ஞாயிறு, நாள்மீன்கள், கோள்கள் அனைத்தையும் உற்று நோக்கியதன் விளைவே இன்றைய அறிவியல் தொழில்நுட்ப வளர்ச்சி என்பதை அறிய முடிகின்றது. இவ்வறிவியல் வளர்ச்சிக்கான சிந்தனைகள் பழந்தமிழ் நூல்களில் இருப்பதை அடிப்படையாகக் கொண்டே இந்த விஞ்ஞான வளர்ச்சிகள் தொடர்ச்சியாக மாற்றம் பெற்று நவீன கால அறிவியல் உலகம் என போற்றப்படும் வகையில் வியக்கத்தக்க முறையில் சாதனைகள் படைத்து கொண்டிருக்கின்றது.

## தொல்காப்பியத்தில் அறிவியல் சிந்தனை

தமிழர்கள் ஆகாயம் வானம் என்று அழைப்பதை தமிழ் செவ்விலக்கியங்கள் விசும்பு, விண், வான் ஆகிய சொற்களால் அழைத்துள்ளனர். விசும்பு என்பது விரிவானது, அகலமானது என பொருள்படும். இதற்கு விரிவடையும் பரப்பு என பொருள் தருகிறார் பாவாணர். இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பே தொல்காப்பியர் விசும்பு என்ற சொல்லை பயன்படுத்தியுள்ளார். உலக உயிர்கள் ஐம்பூதங்களால் ஆனது என்பதை,

" நிலம் தீ நீர் வளி விசும்போடு ஐந்தும் கலந்த மயக்கம் உலகம் "(தொல். 15889)

என்று தொல்காப்பிய பொருளதிகாரத்தில் குறிப்பிடுகிறார். வான் என்பதை தொல்காப்பியர் விண் என்றும் அழைத்துள்ளார். சான்றாக எழுத்ததிகார புள்ளிமயங்கியலில் விண் என்னும் பெயர்ச்சொல்லின் கண் வினைச்சொல் வரும்பொழுது அத்து சாரியை பெற்று கிணத்து என வருவதை,

"விண் என வரும் காய் பெயர் வயின்
உண்மையும் உரித்தே என் சாரியை
செய்யுள் மருங்கின் தொழில் வரு காலை"(தொல். 305 )

என்று கூறியுள்ளார். விசும்பு என்றும் விண் என்றும் குறிப்பிட்ட தொல்காப்பியர் வான் என்று குறிப்பிடவில்லை.ஞாயிறு பன்னிரு உரைகளையும் கடந்து செல்வதற்கு ஓராண்டு ஆகிறது என்பதை,

'' காரும் மாலையும் முல்லை, குறிஞ்சி
கூதிர் யாமம் என்மனார் புலவர் '' ( தொல். 952 )

என்கிற வரிகளில் தொல்காப்பியர் மடங்கள் ஓரையில் ஏற்படும் கார் காலமே முதலில் கூறுகிறார். இதன்வழி தொல்காப்பியர் காலத்தில் சிம்ம ஓரை ஆண்டின் தொடக்கமாக வழக்கில் இருந்ததை அறிய முடிகின்றது.

## புறநானூற்றில் அறிவியல் சிந்தனை

ஒளியுடைய பொருள்களில் எல்லாம் பேரொளியாக விளங்குவதும் உலகத்தாரால் தெய்வம் என போற்றப்படுவது ஆகிய சிறப்பினை பெற்றவை ஞாயிறும் திங்களுமே. வானத்தில் தோன்றி உலகின்கண் நிறைந்த இருளைப் போக்கி என்றும் அழியாது நிலைத்து உலகத்தைக் காப்பவை இவை. என்பதை,

"அகம் கண் விசும்பின் ஆரிருள் அகற்றும்
வெங்கதிர் செல்வன் போலவும்
தண்கதிர் மதியம் போலவும்
நின்று நிலையியற் உலகமொடு உடனே" (புறம். 56;21-25)

" தண்கதிர் மதியம் போலவும்
ஒன் சுடர் ஞாயிறு போலவும்
மண்ணிய பெரும் நீ நிலமிசை யானே " (புறம். 6;27-29 )

என்னும் சங்க இலக்கிய சான்றுகளால் இவை இருள்நீக்கி உலகை இன் புறுத்தலும் நிலைத்து பொருளாகக் கொள்ளப்படும் என்பதை அறிய முடிகின்றது. ஞாயிறு பகலிலும் இரவிலும் வந்து ஒளி செய்து ஒரு நாளில் சுற்றியிருக்கும்

அதிபதியாய் விளங்குகின்றனர். இரு பெறும் பொழுதுகளையும் ஆக்குபவரே இவர் தான் என்பதை பின்வரும் பாடல் அடிகள் சான்று பகர்கின்றது.

'' செஞ் ஞாயிற்று நிலவு வேண்டினும்,
வெண் திங்களுள் வெயில் வேண்டினும்
வேண்டியது விளைக்கும் ஆற்றலை '' ( புறம். 38; 7-9 )

என்ற வரிகள் ஓர் அரசனது பேராற்றலை புலவர் ஒருவர் பாராட்டுகின்றார் இவ்விரு கோள்களின் இயற்கையை மாற்றும் வன்மையின் என்று அவனது சிறப்பினை புகழப்படுகிறது

## திருக்குறளில் அறிவியல் சிந்தனைகள்

உலக அறநூல்களில் தன்னிகரற்றது திருக்குறள் ஆகும். திருக்குறள் அற நூல் மட்டுமன்று அறிவியல் நூலாகவும் ஆழ்ந்து நுட்பமான கருத்துக்களை கொண்ட நூலாகவும் திகழ்கின்றது. வாழ்க்கையாகிய நாணயத்திற்கு அறவியலும் அறிவியலும் ஒவ்வொரு பக்கமாகும் .

'' அறிதொறும் அறியாமை கண்டற்றால் காமம்
செறிதொறும் சேயிழை மாட்டு . ( குறள். 1110 )

எனும் குறள் அறிவியலை அடிப்படையாகக் கொண்டது. தேடல் தான் அறிவியலாகும். ஒன்றை ஒன்று அறியும்போது மீண்டும் அறியாமை அகலும்.. இதுதான் உலக இயல்பு . உலகம் தட்டை என்கிறது சமயம். ஆராய்ந்து பார்த்தபோது உலகம் உருண்டை என கண்டுபிடிக்கப்பட்டது. கற்கத் தொடங்கத் தொடங்க கல்லாமை அகல வேண்டும் ஆராய ஆராய அறியாமை அகலும் எனவே மனித சிந்தனை மேலும் மேலும் ஆராய்ந்து உலகிற்கு அளித்த கொடைகள் பலவாகும்.

" சுவை ஒளி ஊறு ஓசை நாற்றம் என்று ஐந்தின்
வகை தெரிவான் கட்டே உலகு ( குறள்.27 )

இவ்வுலகம் யார் கையில் அடங்கியுள்ளது. சுவை ஒளி ஊறு ஓசை மணம் என்ற பூதங்கள் மூலம் ஐந்தின் கூறு ஆராய்ந்து அறிபவன் அறிவு அடங்கி அடங்கியதே இவ்வுலகம் என தெய்வப் புலவன் வான் மறையில் எடுத்து எழுதியுள்ளார்.

" மருந்து என ஒரு அதிகாரம் படைத்த வள்ளுவர் மருந்து, மருந்து நோய் தீர்க்கும், நோய் தீர்க்கும் முறை ஆகிய மூன்று பாக்களில் கூறியவர் மருந்தே வேண்டாம் என ஏழு பாக்களில் பாடியிருப்பது உண்மையான மருத்துவ அறிவியல் ஆகும்.

"மிகினும் குறையினும் நோய்செய்யும் நூலோர்
வளிமுதலா எண்ணிய மூன்று (குறள்.541 )

உணவும் செயல்களும் ஒருவன் நிலைத்த அளவின்றி அதனினும் மிகுந்தாலும் குறைந்தாலும் நோய் உண்டாகும். எனவே நோய் வராமல் காக்கும் மருத்துவ முறை நுட்பமானது எனவேதான் மருந்தென வேண்டாவாம் யாக்கைக்கு என்கிறார்.

## பாரதியாரின் அறிவியல் சிந்தனைகள்

இருபதாம் நூற்றாண்டின் இணையற்ற கவிஞர் பாரதி. பாரதத்தின் சுதந்திரத்தை பாடிய தேசிய கவிஞர். இந்திய உலக அரங்கில் நிமிர்ந்து நிற்கவும் மக்கள் வாழ்க்கையில் முன்னேற்றம் அடையவும் மாணவர்களுக்கு அறிவியல் சார்ந்த கல்வியை கற்பிக்க வேண்டும் என பாரதியார் விரும்பினார். பாரதியின் அறிவியல் சிந்தனை என்பது மெய்ப்பொருள் அடிப்படையில் பகுத்தறிந்து ஆய்வுக்குரியதாகும்.

"பயிற்றிப் பல கல்வி தந்து இந்த
பாரை உயர்த்திட வேண்டும்" (பாரதியார் கவி.30.3-4 )

என்ற கவிதை வரிகளின் வாயிலாக நாடு உயர்வதற்கான வழியைக் கூறுகிறார். மக்கள் எல்லோரிடமும் அறிவார்ந்த சிந்தனைகளை புகுத்தினாலும், தொழில் சார்ந்த கல்வியை நடைமுறைப்படுத்தும் போதும் பொருளாதார ரீதியில் நாடானது உயர்வடையும் என்று அறிவுறுத்துகிறார். அவர் புதிய ஆத்திச்சூடியில் புதியன விரும்பு எனும் தலைப்பில் புதிய அறிவியல் கண்டுபிடிப்புகளை நிகழ்த்த வேண்டும் என்று கூறுவதால் பாரதியின் அறிவியல் தெளிவு சிந்தனையை உலகமே அரிய வைக்கின்றது.

அவரது அறிவியல் பார்வை, அவர் பெண்ணின் பெருமை பேசினாலும் பராசக்தியை பணிந்தாளும் அவர் தொட்ட பொருள் அனைத்திலுமே அவருக்கு அறிவியல் அணுகுமுறை துணையாக இருந்தது என்பதை உணரமுடிகிறது. அறிவியல் துறையில் பல்வேறு கண்டுபிடிப்புகள் ஏற்பட்டபோது இயந்திரங்கள் நமது நாட்டில் நாமே தயார் செய்ய வேண்டும் என்று அவர் விரும்பினார். உலோக நூல் கற்றுணர் என்பதை தொழில் எனும் தலைப்பில்,

"இரும்பை காய்ச்சி குறுக்கீடு வீரே
யந்திரங்கள் வகுத்திடு வீரே" ( பாரதி கவி. 1.1-2 )

என்று கூறுகிறார்.இரும்புத் தொழில் உலகிலேயே வலிமையும் செல்வமும் கொடுப்பது என்றும் நாட்டினது பாதுகாப்பிற்கான ஆயுதங்களை தயார் செய்வது ஒரு கல்விச் சாலைகளும் இதர பயன்பாட்டிற்கான காகிதங்களையும் செய்ய வேண்டும் என்றும் தனது கவிதைகளில் எடுத்துரைக்கின்றார். தரை வழியாகவும், ஆகாய மார்க்கமாகவும் செல்ல வாகனங்களை தயாரிக்க வேண்டும் என்பதும் அவருடைய நோக்கமாக இருந்தது. சுரங்கத் தொழில் செய்து நாடு வளம்பெற விரும்பியதை,

"வெட்டுக் கனிகள் செய்து தங்கம் முதலாம்
வேறு பல பொருளும் குடைந்து எடுப்போம் " (பாரதி கவி. 3. 1-2 )

என்ற வரிகள் மூலம் அறியலாம். இந்தியாவை ஒரு வளர்ந்த நாடாக பொருளாதார வளர்ச்சி பெற்ற நாடாக மற்ற தொழில் சார்ந்த கல்வி முறையை கொண்டு வருதல் வேண்டும் என்ற ஆக்கப்பூர்வ அறிவியல் சிந்தனைகள் பாரதியார் கவிதைகளில் மிளிர்வதை காணமுடிகின்றது.

## முடிவுரை

அறிவியலும் இலக்கியமும் வெவ்வேறான துறைகளாக இருப்பினும் தமிழ்ச் சமூகப் பின்னணியில் அறிவியல் செய்திகள் இலக்கியமாக பதிவு செய்யப்பட்டு வந்துள்ளது. வானத்தில் நாள்தோறும் நிகழ்கின்ற வானியல் நிகழ்வுகளையும் மாற்றங்களையும் கூர்ந்து கவனித்து வானியல் தொடர்பான சிந்தனைகளை இவ்வுலகுக்கு அறிவியல் சிந்தனைகளாக சங்க இலக்கியங்கள் எடுத்தியம்புகின்றன. வானியல் ஆராய்ச்சியில் தமிழர்களே உலகின் முன்னோடிகளாக விளங்கி பறைசாற்றும் விதமாக சங்கப் பனுவல்களில் பல்வேறு அறிவியல் சார்ந்த செய்திகளை வழங்கியுள்ளதை நாம் காண முடிகின்றது. தமிழில் எழுதப்பட்ட சங்க இலக்கியம் முதல் சமகால இலக்கியங்கள் வரை அறிவியல் செய்திகள் நிரம்பப் பதிவு செய்யப்பட்டுள்ளதை நாம் அறிய முடிகின்றது. அதன் மூலம் அறிவியல் உலகில் தனக்கென தனி இடத்தை பதித்துள்ளனர் தமிழர் என்பது வெள்ளிடைமலை.

# துணைநூற்பட்டியல்


1. முத்து. சு. அறிவியல் செம்மொழி மணிவாசகர் பதிப்பகம், சென்னை - 4.
2. முனைவர் சுப்பிரமணியன். ச. வே, தொல்காப்பியர் தெளிவுரை
3. முனைவர் கந்தசாமி. சோ. ந, தொல்காப்பியத்தின் அமைப்பும் சிறப்பும்.
4. பதினெண் கீழ்க்கணக்கு நூல்கள் - தொகுதி 3 ராஜாராம் துறை முல்லை நிலையம் டி நகர் சென்னை - 17.
5. திருக்குறள் பரிமேலழகர் உரை.
6. பேராசிரியர் ஜெ ஸ்ரீ சந்திரன், தமிழ் இலக்கிய வரலாறு (2002)